விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25


ஒலி 072 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 17 வியாழக்கிழமை (29.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


### ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி

# நாடு திரும்பக் காத்திருந்த சாந்தன் காலமானர்




(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை வழக்கில் 33 வருடம் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையான சாந்தன் (வயது-55) நாடு திரும்பக் காத்திருந்த நிலையில் நேற்று சென்னையில் காலமானார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சகோதரனுடன் இறுதியாக சாந்தன்



(சென்னை)

சென்னையில் காலமான சாந்தன் இறுதியாக எடுத்துக்கொண்ட புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சாந்தனை அவரது சகோதரர் கடந்த வெள்ளிக் 15

## யாழ். வருகின்றது சாந்தனின் பூதவுடல்



(சென்னை)

சென்னையில் காலமான சாந்தனின் பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் உச்ச 15

சாந்தனின் பூதவுடலுக்கு

## பேரறிவாளன், நளினி அஞ்சலி




(சென்னை)

உயிரிழந்த சாந்தனின் உடலுக்கு ராஜிவ் காந்தி கொலை 15

## 'விடுதலைக்கு ஏங்கி யாம் பாடும் இறுதிப் பாடல்'

### சாந்தன் எழுதிய இறுதிக் கவிதை



(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு காலமான சாந்தன் இறுதியாக எழுதிய கவிதை தற்போது வெளியாகியுள்ளது.

சாந்தன் எனும் 15

## வடக்கின் அபிவிருத்திக்கு இந்தியா ஒத்துழைக்கும்

### யாழ்.இந்திய புதிய துணைத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என யாழ்ப்பாணத் திற 15

## இலங்கையில் தமிழர் பகுதியை தனிநாடாக மாற்ற வேண்டும்

### மதுரை ஆதீனம் மோடியிடம் கோரிக்கை

(மதுரை)

இலங்கையில் தமிழர் பகுதியை தனி நாடாக மாற்ற வேண்டும்" என மதுரை ஆதீனத்தின் பீடாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு இந்தியப் பிரதமர் நேற்று முன்தினம் வந்த வேளை மதுரை ஆதீனத்தின் பீடாதிபதியை சந்தித்து பேசினார்.

இவ்வாறு இடம் 15

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

### சுன்னாகம் மயிலணியில் சம்பவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலணி பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் மயிலணி வடக்கு சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த தேவராசா கமல்ராஜ் (வயது-39) என்ற ஒரு 15

## சபாநாயகருக்கு எதிரான் பிரேரணை

### சுதந்திரக்கட்சியும் ஆதரவு

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் 15

## ஐ.நா பொறிமுறைகள் ஆக்கபூர்வமற்றவை

### ஜெனிவாவில் அலி சப்ரி

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் செயற்பாடுகள் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கொண்டதாக அமையக்கூடாதென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21.04.1974

மறைவு
12.03.2023

அமரர்

## இராசதுரை குமரேஸ்வரன் (சூட்டி அண்ணா)

( ஸ்தாபகர் - ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ் - நெல்லியடி )

திதி : அபரபக்க பஞ்சமி

ஒளிவீசும் உந்தன் திருவதனம் ஓராண்டு சென்றும் எம் மனத்திலும்
நினைவிலும் சொல்லிலும் மறையாது பிரகாசித்துக் கொண்டேயிருக்கின்றது.
எங்கும் எல்லாவற்றிலும் எல்லோர் மனங்களிலும்
சூட்டி, சூட்டி, சூட்டி அண்ணா எனும் நாமமே தாரக மந்திரமாய்
ஒலித்துக்கொண்டேயிருக்கிறது மறக்க முடியுமா உந்தனை
என்றும் உங்கள் நினைவுடன் வாழும் நாம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-8428)

குடும்பத்தினர்

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30 - 09 - 1937

மறைவு
19 - 02 - 2014

## அமரர் பொன். அப்பையா

ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், சமாதான நீதவான் (J.P)

திதி : அபரபக்க பஞ்சமி

ஆண்டுகள் பத்து ஆனாலும் அகன்றிடா
நினைவுகள் எம்முன்னே தோன்றுதப்பா!
துடுக்கான நடையும், மிடுக்கான பேச்சும்
புன்னகைத்த பூமுகமும் எமக்கு
பெருமைகளைத் தந்தன்றோ! இப்பேர
மெய்யுருகி கண்நனையத் தங்கள்
மலர்ப்பாதம் வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அம்பிகை வாசம்"
புலோலி தெற்கு, புலோலி.

(C-8434)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட
பாராளுமன்ற உறுப்பினர்,
ஜனாதிபதி சட்டத்தரணி M.A சுமந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்.

திருமதி

## கிளேடிஸ் புஸ்பராணி மதியாபரணன்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-8429)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
தொகுதி கிளை பருத்தித்துறை,
இளைஞர் அணி, மகளிர் அணி, பருத்தித்துறை தொகுதி கிளை.

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
ஜனாதிபதி சட்டத்தரணி M.A சுமந்திரன் அவர்களின் அன்புத் தாயார்.

## திருமதி கிளேடிஸ் புஸ்பராணி மதியாபரணன்

அவர்கள் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
தொகுதி கிளை உடுப்பிட்டி,
(C-843 இளைஞர் அணி, மகளிர் அணி, உடுப்பிட்டி தொகுதி கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 33 ஆண்டுகளாக காத்திருந்த தாயின் ஏக்கம் இறுதிவரை நிறைவேறவில்லை

## இரங்கல் செய்தியில் சீமான்



**(சென்னை)**

**சாந்தனை உயிரோடு தாயகத்திற்கு அனுப்புவதில்லை என்ற முடிவில் இந்திய ஒன்றிய அரசும் தமிழ்நாடு மாநில அரசும் வெற்றி பெற்றுள்ளது என நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.**

சாந்தனின் மரணத்திற்கு தெரிவித்த இரங்கல் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். பெற்ற மகனை ஒரு முறையாவது உயிரோடு பார்த்துவிட வேண்டுமென 33 ஆண்டுகளுக்கும் மேலாக கவலை தோய்ந்த இதயத்தோடும் கண்கள் நிறைந்த கண்ணீரோடும் காத்திருந்த தாயின் வாழ்நாள் ஏக்கம் இறுதிவரை நிறைவேறவில்லை என்பதுதான் வரலாற்றுப் பெருந்துயரம்.

சாந்தனின் உயிரற்ற உடலையாவது அவரது தாயிடம் ஒப்படைக்க இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இத்துயர்மிகு சூழலில் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பிறகும் திருச்சி சித்திரவதை முகாமில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ளவர்களையாவது தி.மு.க அரசு உடனடியாக விடுதலை செய்ய முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# இ.போ.ச தொடர்பாக 1958 இற்கு முறையிடலாம்



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளில் இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகளை வழங்க 1958 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகள் அறிவித்தலில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். (நி-5-6)

# சிறுவர்களிடையே அதிகரித்த ஊட்டச்சத்து குறைபாடு

## வைத்தியர் எச்சரிக்கை

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனை குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகளவான உடல் ஊனமுற்ற சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் சிறுவர்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளதாக வைத்தியர் ஜ°.சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (நி-5-6)

## அஸ்வெசும திட்டம்

# 2 ஆம் கட்ட நடவடிக்கையில் 30 ஆயிரம் விண்ணப்பங்கள்

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அஸ்வெசும இரண்டாம் கட்ட நடவடிக்கையின் முதல் 12 நாட் களில் 30 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேலையின்மை தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்டு இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய 2 மில்லியன் மக்கள் ஏற்கனவே நிவாரண உதவிகளைப் பெற்று வருவதாகவும் இரண்டாம் கட்டத்தின் கீழ் புதிய விண்ணப்பதாரர்களுடன் 2.4 மில்லியன் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே நோக்கமாகும்.

இரண்டாம் கட்ட விண்ணப்பம் ஆரம்பிக்கப்பட்ட பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை சுமார் 30,000 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 8,750 விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாகவும் ஏனையவர்கள் இணையம் மூலமாகவும் நேரடியாகவும் விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-5-6)

# தொடரும் யுக்திய

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட "யுக்திய" சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 647 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 540 சந்தேகநபர்கள் மற்றும் குற்றப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பட்டியலில் இருந்த 107 சந்தேக நபர்கள் உட்பட மொத்தம் 647 சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை 118 கிராம் 252 மில்லிகிராம் ஹெரோயின், 674 மி.கி கஞ்சா 1 கிலோ 841 கிராம், மாவா 1 கிலோ 33 கிராம், 302 கஞ்சா செடிகள் என்பன இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 540 சந்தேக நபர்களில் ஒருவர் தடுப்புக்காவல் உத்தரவின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் போதைக்கு அடிமையான 2 பேர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். (நி-5-6)

# முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் காலமானார்



(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் (98) நேற்று மாலை காலமானார்.

1977 ஆம் ஆண்டு மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமைச்சரவையில் நிதி அமைச்சராக பதவியேற்ற பின்னர் இலங்கையில் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினார்.

1977 முதல் 1987 வரை அதிக வரவு- செலவுத் திட்டங்களை முன்வைத்தவர் மறைந்த டி மெல். நாட்டிலேயே அதிக காலம்நிதியமைச்சராக இருந்தவர்.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து அரசியலைத் தொடங்கினார்.பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பேக்கரி பொருட்களின் விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

பாண் விற்பனை 25வீதமாகவும் கேக் உள்ளிட்ட பிற பேக்கரி பொருட்கள் விற்பனை 50 வீதமாகவும் குறைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உற்பத்திச்செலவு அதிகரிப்பு, பேக்கரிப் பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் விற்பனை குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் அரசாங்கம் பேக்கரி பொருட்களுக்கு தேவையான மூலப்பொருட்களுக்கு வரி விலக்கு அளித்து முட்டையின் விலையை குறைத்து நுகர்வோருக்கு நிவாரணம்வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
22
.
08
.
1949

மறைவு
28
-
02
-
2024

# தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

## (Rtd Customer Services Manager, Bank of Ceylon)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் அரச வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தர்மஜெயசூரியர் அவர்கள் நேற்று (28.02.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - ராணிநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துரட்ணம் - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ரோகிணிதேவியின் அன்புக் கணவரும் ரோகன்ராஜ், தேனுகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜித்தாவின் பாசமிகு மாமனாரும் டனஹரிஷ், சாக்ஷிஹரிணி, நிஹாரிஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் லிங்கநாயகம், காலஞ்சென்றவர்களான தர்மதுரை, தர்மசந்திரன் மற்றும் தர்மகுணலோசனா, தர்மகுணபூசனா, காலஞ்சென்றவர்களான தர்மகுணவதனா, தர்மகுணபவானி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னதம்பி, அருளானந்தன், சிவபாலசுந்தரம், சண்முகராஜா, விமலாதேவி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சொர்ணலக்சுமி, பத்மாதேவி, மாலினிதேவி மற்றும் கமலாதேவி, தவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் மற்றும் கனகரட்ணம், உமா ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற விமல்ராஜ் மற்றும் நிமல்ராஜ், விக்டர், மதனராஜா, மோகனராஜா, மாளவியா, ஸ்ரீவாணி, மோகனாஹீவாணி, அனுராகினி, குகராஜ், ஜெனனி, உஷேந்தன், ஜெயந்தன், சுதாயினி, அனோஜா, நிரோஜா, சஜீவ் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் குமுதினி, அனுஷா, சிவநிதி, விக்னராஜ், யுஷாந்தி, தேனுகா, ஆரணி, தர்சினி, மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

த.ரோகிணிதேவி (மனைவி) - 021 223 0785

த.ரோகன்ராஜ் (மகன்) - 077 175 8485

Rohan Enterprise

த.தேனுகன் (மகன்) - 077 889 2185

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

(19308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்கவில் நேற்றும் விமானங்கள் ரத்து

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பயணிக்கவிருந்த மூன்று விமான சேவைகள் நேற்றும் ரத்தாகியுள்ளன.

இதன்படி, நேற்று காலை 7.25 அளவில் ஹைதராபாத் நோக்கி பயணிக்கவிருந்த யு.எல்.177 என்ற விமானமும் 8.55 அளவில் காத்மண்டு நோக்கி பயணிக்கவிருந்த யு.எல்.181 என்ற விமானமும் ரத்தாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, நேற்று அதிகாலை கோலாலம்பூர் நோக்கி பயணித்த எம்.எச்.178 என்ற விமான சேவையும் ரத்து செய்யப்பட்டதாக வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகளின் தாமதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு எதிர்வரும் சில நாட்களுக்குள் தீர்வு காண முடியும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

திட்டமிடப்பட்டிருந்த 7 விமான சேவைகள் நேற்று முன்தினம் இரத்துச் செய்யப்பட்டதுடன், இதன் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாரிய சிரமங்களை எதிர் நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## கொழும்பு நிலவரம்

# இளநீர்-200 ரூபாய்

## தோடம்பழம்-120-140 ரூபாய்

(கொழும்பு)

நாட்டில் இந்நாட்களில் நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக செவ்விளநீர் தேவை அதிகரித்துள்ளமையினால் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் செவ்விளநீர் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பில் செவ்விளநீர் ஒன்றின் விலை 120 முதல் 140 ரூபாய் வரை இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை இந்த வாரம் கொழும்பில் தோடம்பழம் ஒன்றின் விலை 120 முதல் 140 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. (நி-5-6)

# வனவிலங்கு உத்தியோகத்தர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை

(கொழும்பு)

நாடு முழுவதும் நானூற்று நாற்பத்தொரு வனவிலங்கு உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் 51 வீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வனவிலங்கு கட்டுப்பாட்டு அலுவலர்கள் சங்கத் தலைவர் எம்.பீரிஸ் கருத்துத்தெரிவிக்கையில் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் யானை - மனித மோதலை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வறண்ட பிரதேசங்களில் யானை-மனித மோதல்கள் அதிகரிப்பதற்கு அதிகாரிகளின் பற்றாக்குறை முக்கிய காரணமாக உள்ளது இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)


## சேவை நலன் பாராட்டு

யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலையில் ஆசிரியப் பணியை சிறப்பாக மேற்கொண்ட

திருமதி.

**மல்லிகா தர்மநாதன்**

(B.A, Dip.in Edu, SLTS-I)

அவர்கள் 29.02.2024 இன்று வியாழக்கிழமை அகவை அறுபதில் ஓய்வு பெறும் இவ்வேளை அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்,
யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை.


# புலம்பெயர் தமிழர்களை சந்திக்கவுள்ள அநுரகுமார

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் வாரம் கனடாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, கனடாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களையும் அவர் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த 5 ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இராசிபலன்

29.02.2024
மாசி 17, வியாழக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.31 மணிவரை

சித்திரை காலை 8.24மணிவரை
சுபநேரம்-7.58-9.28 மணிவரை
இராகுகாலம்-1.58-3.28 மணிவரை

சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி.

வளவன்


மேஷம்
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


கடகம்
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.


துலாம்
புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.


மகரம்
நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


ரிஷபம்
உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


சிம்மம்
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


விருச்சிகம்
பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


கும்பம்
நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.


மிதுனம்
பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.


கன்னி
வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.


தனுசு
தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.


மீனம்
தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பொதுவாழ்வில் கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

நன்றி உணர்வில் கிடைப்பதை போல ஆனந்தம் வேறு எதிலும் கிடைப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியு டன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத் தும் யாழின் நாயகன் உதை பந்தாட்ட தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதா னத்தில் நடைபெற்று வரு கின்றது. இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு மனோகரா அணியை எதிர்த்து யங்கம் பன்ஸ் அணியும், பிற்பகல் 4.45 மணிக்கு சென்மே ரிஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணியும் மோத வுள்ளன. (நி-5-6-90)

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியு டன் ஏஜ ஸ்போட்ஸின் பிர தான அனுசரணையுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட அணிகளுக் கிடையே றேஞ்சஸ் கிண் ணத்திற்கான உதைபந் தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விண்மீன் அணியை எதிர் த்து காரைநகர் தோப்புக் காடு அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு இமையா ணன் மத்திய அணியை எதிர்த்து நாமகள் அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)




# உடனடித் தீர்வைப் பெற்றுத் தரக்கோரி

# யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் கவனயீர்ப்பு




(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் பல்கலைக்கழக முன்றலில் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்க ளில் நேற்று மற்றும் இன்று இரு நாள் வேலை நிறுத்த போராட்டம் இடம் பெற்றுவருகின்ற நிலை யில் அதற்கு ஆதரவு தெரி விக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் இந்த கவ னயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பல்கலைக்கழக கல்விசா ராப் பணியாளர்களின் சம் பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர் களைப் பாதிக்கும் பிரச்சி னைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப் பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் அரசாங்கமும் இது வரை தீர்வினை வழங்கா தமைக்கு எதிர்ப்புத் தெரி வித்தும் உடனடித் தீர் வினை வேண்டியும் குறி த்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதே வேளை இன்று வியாழக்கிழமை பல்கலை க்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன் னால் கவனயீர்ப்பு ஆர்ப் பாட்டம் ஒன்று முன் னெடுக்கபடவுள்ளது. (நி-5-6-33)

## நல்லூர் விபத்து சம்பவம்; பேருந்தின் அனுமதி இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பில் பூரண விசாரணை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்திய தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் விசாரணை நிறைவடையும் வரையில் குறித்த தொடர்புடைய பேருந்தின் வழித்தட அனுமதி தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளதாக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்திய தலைவர் தெரிவித்தார். (நி-5-6-33)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டி லிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பேரவை மற்றும் கலாசார அதிகாரசபை ஆகிய வற்றின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடை பெறவுள்ளது. (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 200 | 225 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 160 | 120 | 180 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 400 | 425 | 500 |
| தக்காளி | 450 | 350 | 300 | 380 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 80 | 120 | 150 |
| கோவா | 400 | 420 | 420 | 350 | 500 |
| கரட் | 600 | 550 | 500 | 500 | 600 |
| பூசணி | 200 | 260 | 150 | 160 | 300 |
| புடோல் | 200 | 150 | 140 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 220 | 130 | 170 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 220 | 310 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 340 | 380 | 340 | 450 |
| பாகற்காய் | 350 | 400 | 250 | 250 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 150 | 180 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 300 | 140 | 150 |
| பயற்றங்காய் | 300 | 250 | 180 | 250 | 350 |
| லீக்ஸ் | 450 | 400 | 360 | 350 | 500 |
| பீற்றூட் | 350 | 250 | 320 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 400 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 1200 | 1000 | 1700 | 1400 |
| போஞ்சி | 400 | 350 | 350 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 50 | 80 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 70 | 70-120 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 450 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 150 | 120 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 130 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 90 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | [illegible] | 80 | 100 | 250 |

# விவசாயிகளுக்கு மானியமாக உபகரணங்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம் )

யாழ்.வலி கிழக்கு் விவ சாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் விவசாய உபகரணங்கள் கடற்றொ ழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செய லகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் இரண்டு சக்கர உழவு இயந்திரம் பொருத்தி நிலம் பண்படுத்தும் (கலப்பை) இயந்திரம் மற்றும் நீர் இறைக் கும் இயந்திரம் உட்பட்ட விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் அ.சிவபால சுந்தரன், மாவட்ட வர்த்தக லகத் தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர், விவசா யத்திணைக்கள உதவிப் பணிப்பா ளர், விவசாயஅமைப் பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கல ந்து கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்டு ள்ள பொருளாதார நிலைமைகளி னால் பாதிக்கப்பட்ட விவசாய அமைப் புகளின் பிரதிநிதி கள் மற்றும் தனிந பர் அடங்கலாக 17 பேருக்கு விவசாய உபகரணங்கள் அவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள் ளன. (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துபாயில் சாதனை புரிந்த யாழ்ப்பாணச் சிறுவன்



(யாழ்ப்பாணம்)

யாழ். சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த பாக்கியநாதன் டேவிட் டாலின்சன் என்ற 16 வயதுச் சிறுவன் துபாய் - அபுதாபியில் இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

துபாய்- அபுதாபியில் கடந்த 15ஆம் திகதி சர்வதேச ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி நடைபெற்றது. இதில் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 15 கழகங்கள் பங்குபற்றி இருந்தன.

இவ் மாணவனை குறித்த போட்டியில் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை அணி மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது.

அத்துடன் அங்கு நடைபெற்ற பந்து கட்டுப்பாட்டு போட்டியில் கலந்து கொண்டு, கீழே பந்தை விழ விடாமல் ஆயிரம் தடவைகள் கட்டுப்படுத்தி முதலாவது இடத்தையும் பெற்றுள்ளார். இவர் இளவாலை ஹென்றியரசர் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சாந்தனின் உயிரிழப்பிற்கு இரு நாட்டு அரசுகளுமே பொறுப்பு

## குரலற்றவர்களின் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சாந்தனின் மரணத்திற்கு இந்திய, இலங்கை அரசுகளும் தமிழ்தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை நல்லிணக்க அடிப்படையில் ஒரே இரவில் பேச்சுவார்த்தை மூலம் விடுதலை செய்ய முடியும் என்றால் ஏன் சாந்தனை உடன் விடுதலை செய்ய முடியாமல் போனது என குறித்த அமைப்பினது ஒருங்கிணைப்பாளர் கேள்விஎழுப்பியுள்ளார்.

அத்தோடு இலங்கைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6-33)

# நெடுந்தூர பேருந்து சேவைகள் நிறுத்தம்

## பயணிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உள்ளூர் தனியார் பேருந்து சேவைகள் வழமை போன்று சேவையை முன்னெடுத்து வந்த நிலையில், நெடுந்தூர பேருந்து சேவைகள் பேருந்து தரிப்பிடம் இன்மையால் தமது சேவைகளை நேற்று நிறுத்தி இருந்ததால் பயணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியிருந்தனர். (நி-5-6)

# பூந்தோட்டத்தில் மதுபான நிலையம் அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு

(குருமன்காடு)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, ஒரு மதுபான நிலையம் இயங்கி வரும் நிலையில் மேலும் ஒரு மதுச்சாலையினை திறப்பதால் கலாசார சீரழிவுகள் அதிகரிக்கும் நிலமை காணப்படுவதுடன், அந்தபகுதியை பயன்படுத்தும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த மதுபான நிலையம் அமைப்பதற்கு எதிராக பூந்தோட்டம் வர்த்தகர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளதுடன், அதற்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று கோரி மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளருக்கும் மகஜர் கையளித்துள்ளனர். (நி-5-6-250)

# உரிமையை பெறுவதற்கு அடிப்படையானது கல்வியே!

## அங்கஜன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

உரிமை எனப் பலரும் பேசிக்கொண்டே இருக்கின்றோம். ஆனால் உரிமையை பெறுவ தற்கான அடிப்படை கல்வியே ஆகும் என நான் நம்புகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விடுதியில் அண்மையில் நடை பெற்ற உயர்கல்விக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். இலங்கையின் மூளை யாழ்ப்பாணம். வடக்கு மாகாணம் கல்வியில் சிறந்து விளங்கியது. ஆனால் யுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த நிலைமை தற்போது தான் மீண்டும் உருவாகி கொண்டிருக்கின்றது. உரிமை எனப் பலரும் பேசிக் கொண்டே இருக்கின்றோம். ஆனால் உரிமையை பெறுவதற்கான அடிப்படை கல்வியே ஆகும் என நான் நம்புவதாக தெரிவித்தார். (நி-5-6-33)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 66
உயரம்: -5'6"
தகைமை/தொழில்: A/L (Banker)
எதிர்பார்ப்பு: அரச தொழில், சைவபோசனம்
தொ.இ: B/14007

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 32
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L கமம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14010

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : பரணி
கி.பா: 38
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS(Doctor)
எதிர்பார்ப்பு : Doctor, ஏனையவை
தொ.இ: B/14012

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம் : சதயம்
கி.பா: -
உயரம்: 6"
தகைமை/ தொழில்: A/L, கனடா
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14014

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 64 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: College, B.Com (Reading), Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14017

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 19 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC, Mphil(Reading)
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ:G/14028

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 22 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc,(IT),Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor,Engineer
தொ.இ:G/14031

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 07 செவ் சூரி 10 இல்
உயரம்: -5'4"
தகைமை/தொழில்: Bsc(Hons), TO (Temperary)
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்
தொ.இ:G/14033

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# 'ககன்யான்' திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு செல்லும் தமிழன்

(டில்லி)

ககன்யான் திட்டத்தில் விண்வெளி வீரர்களாக தேர்வான நால்வரில் ஒருவராக தமிழ்நாட்டைச் சேர்ந்த அஜித் கிருஷ்ணனும் இடம்பிடித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் ஆய்வு மையத்தில் ககன்யான் திட்டப்பணிகள் குறித்த பணிகளை பிரதமர் மோடி நேற்று முன்தினம் நேரில் சென்று ஆரம்பித்து வைத்தார்.

இதையடுத்து ககன்யான் திட்டத்தின் கீழ் விண்வெளிக்கு செல்லும் 4 வீரர்களின் பெயர்களை பிரதமர் மோடி அறிவித்தார். அதன்படி குரூப் கப்டன்கள் பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் மற்றும் விங் கமாண்டர் சுபானஷ் சுக்லா ஆகியோர் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளி செல்ல உள்ளனர். இவர்கள் கடந்த ஆறு மாதங்களாக விண்வெளி செல்வதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். (நி-5-6)




# மாலைதீவில் இருந்து நேற்று வெளியேறிய இந்திய இராணுவம்



(மாலே)

மாலைதீவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்திய இராணுவம் வெளியேறிய நிலையில் அந்த இடத்திற்கு திறமை வாய்ந்த தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாலைதீவில் உள்ள இந்திய இராணுவம் வெளியேறுவது தொடர்பாக இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தின. இதில் மாலைதீவில் உள்ள இந்திய இராணுவ வீரர்களுக்குப் பதிலாக திறமையான தொழில்நுட்ப பணியாளர்களை நியமிக்க இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

இராணுவ வீரர்களும் திரும்பப் பெறப்பட்டு மார்ச் 10ஆம் திகதிக்குள் ஒரு விமானப்படைத் தளத்தில் இருக்கும் இராணுவ வீரர்களுக்குப் பதிலாக தொழில்நுட்ப பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் மே 10 ஆம் திகதிக்குள் மற்ற இரண்டு விமானப் படைத்தளங்களில் உள்ள இராணுவ வீரர்களும் திரும்பப் பெறப்பட்டு, தொழில்நுட்ப பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்திய படைகளுக்கு பதிலாகவும் மருத்துவ நோக்கங்களுக்காக இந்தியா வழங்கிய ஹெலிகொப்டர்களை கையாளவும் முதல் இந்திய தொழில்நுட்ப பணியாளர்கள் மாலைதீவுக்கு வந்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தற்போது சீனுகானில் நிறுத்தப்பட்டுள்ள இந்தியப் படைகளுக்குப் பதிலாக ஹெலிகொப்டரை இயக்கும் குழுவினர் மாலைதீவு வந்தடைந்துள்ளனர் என்று கூறியுள்ளது.

இதற்கிடையில் லாமுகன் கத்தூ விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள ஹெலிகொப்டர் பராமரிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பப்படும் என்றும் மாற்று ஹெலிகொப்டர் இந்திய போர்க்கப்பலில் இருந்து இன்று வரவுள்ளதாகவும் மாலைதீவு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.(நி-5-6)

# ஐரோப்பிய...

# ரஷ்யா ...

## பிரான்...

(பாரிஸ்)

ரஷ்யா- உக்ரைன்...
கூடாது. ஐரோப்பிய...
இருக்க ரஷ்யா இ...
அவசியம் என பிர...
மெக்ரோன் தெரிவி...

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற உக்ரைனுக்கு ஆதரவான நாடுகளின் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ரஷ்யா வெற்றி பெறாமலிருக்க நாங்கள் அனைத்தையும் செய்வோம். ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன்தான் நாங்கள் போரிடு... மக்களு...

குறு... தூர ஏ... குண்டு... விரைவி...

உக்... களின் ... ப்ப ே... தால் ... செய்வே... ளார்.

# ஆற்றில் கவிழ்ந்த பேருந்து 31 பேர் பலி, 10 பேர் படுகாயம்

## மாலியில் கோர விபத்து



மேற்கு ஆபிரிக்கா நாடான மாலியில் இருந்து பர்கினா பாசோவிற்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 31 பேர் உயிரிழந்துள்ளதோடு 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பேருந்தில் 4இற்கும் மேற்பட்டோர் பமாகோவின் தெற்குப் பகுதியான கோமாண்டு அருகே பேருந்து ஆற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தை இடித்துக் கொண்டு ஆற்றில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 31 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 10 பேர் படுகாயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ.நா. தரவுகளின்படி உலக அளவில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கையில் 2 சதவீதம் மட்டுமே ஆபிரிக்க நாடுகளில் உள்ளன. ஆனால் உலகளவில் நடைபெறும் விபத்துகளில் நான்கில் ஒரு பகுதி ஆபிரிக்காவில் நடை[illegible] (நி-5-6)

# நேட்டோவில் சு... ஹங்கேரி பாராளு...

(ஸ்டாக்ஹோம்)

நேட்டோ அமைப்பில் சுவீடன் இணைவதற்கு ஹங்கேரி பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்ய ஜனாதிபதி புடின் உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை தொடங்கினார். இதனிடையே கடந்த ஆண்டு பின்லாந்து நேட்டோ அமைப்பில் சேர்ந்தது. தொடர்ந்து சுவீடனும் நேட்டோ அமைப்பில் இணைய நேட்டோ நாடுகள் ஒப்புதல் அளித்தன.

இதில் ஹங்கேரி அரசு மட்டும் நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் இருந்து வந்த நிலையில் தற்போது நேட்டோ அமைப்பில் சுவீடன் இணைவதற்கு ஹங்கேரி பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் உள்ள ... இதற்கான விவா... கெடுப்பு நடைபெ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப்பிய நாடுகள் பாதுகாப்பாக இருக்க
# ...ா போரில் தோற்க வேண்டும்

## ...ரான்ஸ் ஜனாதிபதி



**உக்ரைன் போரில் ரஷ்யா வெற்றி பெறக் ...ரோப்பிய நாடுகள் பாதுகாப்புடன் நிலையாக ...ஷ்யா இப்போரில் தோற்க வேண்டியது ... என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் ... தெரிவித்துள்ளார்.**

...ில் ...த ...ில் ...ற் ...று ...ும் ...றி ...ன ...ம். ...னப் ...ள் போரிடுகிறோமே தவிர ரஷ்யா மக்களுடன் அல்ல.

குறுகிய தூர மற்றும் தொலை தூர ஏவுகணைகளும் வெடி குண்டுகளும் உக்ரைனுக்கு விரைவில் வழங்கப்படும்.

உக்ரைனுக்கு நட்பு நாடு களின் இராணுவத்தை அனு ப்ப வேண்டிய சூழல் வந் தால் அதையும் பரிசீலனை செய்வோம் என குறிப்பிட்டுள் ளார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன் நேட்டோவின் ஐரோப்பிய உறுப்பு நாடுகள் உக்ரைனில் போரிடுவதற்காக தங்களது துருப்புக் களை அனுப்பினால் தமது படையினருக்கும் நேட்டோ இராணுவக் கூட்டணிக்கும் இடை யேயான மோதலை தவிர்க்க முடியாது என ரஷ்யா எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவுக்கும் நேட்டோ வுக்கும் இடையிலான மோதல் மூன்றாம் உலகப் போரைத் தூண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

## ...ில் சுவீடன் இணைய ...ாராளுமன்றம் ஒப்புதல்



...நகரில் உள்ள பாராளுமன்றத்தில் இதற்கான விவாதம் மற்றும் வாக் கெடுப்பு நடைபெற்றது. இதில் சுவீடன் இணைவதற்கு 188 உறுப்பினர்கள் ஆத ரவு தெரிவித்தனர். 6 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர். (நி-5-6)

## உக்ரைனுக்கு ஆயுதங்களை கொடுக்க தயங்கும் ஜேர்மன்


(கீவ்)

உக்ரைன் கோரிய ஆயு தத்தை ஜேர்மன் ஏன் கொடு க்க தயங்குகிறது என்பது தொடர் பில் ஜேர்மன் பிரதமர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் விளக்கமளித் துள்ளார்.

ரஷ்யாவுடன் கடந்த இர ண்டு வருடங்களாக போர் புரிந்து வரும் உக்ரைன் ஜேர்மனியிடம் நீண்ட தூர கப்பல் ஏவுகணையை தங்க ளுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

குறித்த ஏவுகணையானது 500 கிலோமீற்றர் தூரம் பாயும் திறன்கொண்டதுடன் அதன் மூலம் உக்ரைனிலிரு ந்து ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்த முடியும் எனவும் கூறப் படுகிறது.

இந்நிலையில் அந்த ஏவுக



ணையை உக்ரைனுக்கு வழங்குவதற்கு ஜேர்மனி தயக்கம் காட்டி வருகிறது.

இது தொடர்பில் விளக்கமளித்த ஓலாஃப் ஸ்கோல்ஸ், உக்ரைனுக்கு உதவுவோம் ஆனால், அதனால் போரை அதிகரிக்கும் விருப்பமோ அல்லது ஜேர்மனியையோ நேட்டோ அமைப்பையோ போருக் குள் இழுக்கும் விருப்பமோ தங்களுக்கு இல்லை என்பதையும் ஜேர்மன் வீரர்களை உக்ரைனுக்கு போருக்கு அனுப்புவதில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான

## நீதி கானல் நீரே- அருட்தந்தை மா.சத்திவேல்

**(நெளுக்குளம்)**


**காணமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது கானல் நீராகவே உள்ளது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அரசின் செயற்பாடுகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் தமிழர்களுக்கும் மட்டுமல்ல வடகிழக்கிற்கு வெளியே நீதி மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் நம்பிக்கை இல்லை. காலத்தை இழுத்து அடித்து நீதியை மறுக்கும் செயற்பாடுகளையே அனைத்து ஆட்சியாளர்களும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும்.

இந்நிலை இனியும் தொடர சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஐ.நா மனித உரிமை பேரவையும் இனியும் இடமளிக்கக்கூடாது என்பது எமது உருக்கமானதும் அழுத்தமானதுமான வேண்டுகோள் எனத் தெரிவித்தார். (நி- 5-6-299)

# உடைமையில் போதைப்பொருள் பெண் ஒருவர் கைது



(தருமபுரம்)

சட்டவிரோத போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண ஒருவர் பொலிஸாரால் கைது. தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று சுற்றிவளைப்பு மேற்கொண்ட வேளை குறித்த கைதுச் சம்பவம் இடம் பெற்றது.

பெண் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஐஸ் 165 மில்லிகிராம் ஹெரோயின் 3900 மில்லிகிராம் போதைப் பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டதோடு கைதான நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிஎம்சதுரங்க தெரிவித்துள்ளார்.(நி-5-6-316)

# தென்னை மரங்களை சேதப்படுத்தும் காட்டு யானைகள்

## கிராம மக்கள் கவலை

(அக்கராயன்)

அக்கராயன் கிழக்கு, சமாதானபுரம், கொங்காதரன் குடியிருப்பு பகுதிகளுக்கு அக்கராயன் குளத்தின் வழியாக வருகை தரும் யானைகள் தென்னை மரங்களை பெருமளவில் அழித்துவருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

யானை வேலிகளை அமைப்பதன் மூலமே யானைகளை கட்டுப்படுத்த முடியும் எனத்தெரிவிக்கும் அப்பகுதி மக்கள், தற்போது உடனடியாக அதிகாரிகள் யானை வெடிகளை வழங்கி யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# அபாயகர வெடிபொருட்கள் அகற்றம்

(கண்டாவ்ளை)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இருபத்தெட்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது சதுரமீற்றர் பரப்பளவில் (2,844,239 sqm) இருந்து முப்பத்தெட்டாயிரத்து முன்நூற்று நாற்பத்தெட்டு (38,348) அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் ஷார்ப் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (நி-5-6-315)

# இன்று ஒரு தகவல் 51



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆத்திகமும் நாத்திகமும்

ஆத்திக- நாத்திக வாதம் என்பது உலகம் எப்போது ஆரம்பமாகியதோ அப்போதே ஆரம்பமாகிவிட்டது.

உலகம் எது வரைக்கும் இருக்குமோ அது வரைக்கும் இதுவும் இருக்கும். அதனாலே அதைப்பற்றி பேசி இப்போது ஒரு முடிவுக்கு வர முடியாது.

எந்தப் பாதையில் போனாலும் அதில் ஒரு ஞானத்தெளிவு வர வேண்டும். அது தான் முக்கியம்.

ஸ்ரீராம கிருஷ்ண பரஹம்சர் ஓர் உதாரணம் சொல்கிறார்!

குரங்கு தன்னுடைய குட்டியை தூக்கி கொண்டு போவதையும் பார்த்து இருப்பீர்கள்! பூனை தன்னுடைய குட்டியை தூக்கி கொண்டு போவதையும் பார்த்து இருப்பீர்கள்! இது இரண்டிற்கும் இடையில் முக்கியமான வித்தியாசம் இருக்கு கவனித்தீர்களா?

குரங்கு விடயத்தில் குட்டி தனது தாயை பிடித்து இருக்கும். ஆனால் பூனை அப்படி இல்லை. தாய் குட்டியை பிடித்து இருக்கும். குரங்கு குட்டி தன்னோட தாயை தானாகவே பிடித்து கொண்டு இருக்கும். அது தன்னையே சார்ந்து இருக்கும். கீழே விழுவதும் விழாமல் இருப்பதும் அதன் கையிலே தான் இருக்கும். தாய் குரங்கு தன்னுடைய பாட்டுக்கு ஏற்ற மாதிரி கிளைக்கு கிளை தாவி போய்க் கொண்டு இருக்கும். குட்டி கையை விட்டு விட்டால் போச்சு. பொத் என்று கீழே விழ வேண்டியது தான்!

தன்னையே சார்ந்து இருந்த குரங்கு குட்டியோட நிலை இது. ஆனால் பூனைக்குட்டியோட நிலை இப்படி இல்லை. அது இருக்கிற இடத்தில் இருந்து தாயை பார்த்து பரிதாபமாக கத்தும். தாய்ப்பூனை ஓடி வந்து தன்னோட குட்டியை தூக்கி கொண்டு போகும். இவ்வாறு பூனை தன்னை சார்ந்து இருப்பது இல்லை. தனது தாயை சார்ந்து இருப்பதனால் அதற்கு ஒரு அபாயமும் இல்லை. இதை மனிதர் யோசித்து பார்க்கணும் என்கிறார் இராமகிருஷ்ணர்.

மனிதன் தன்னையே சார்ந்து இருப்பதற்கும் இறையருளை சார்ந்து இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் இது தான். எப்படி இருந்தாலும் இரண்டு வகையான கொள்கைகளும் உலகம் இருக்கும் வரைக்கும் இருக்கும் என்பது தத்துவஞானிகளோட கருத்து! ஏன் என்றால் இந்த விவாதத்தில் ஒரு முக்கிய முடிவுக்கு வருவது கஷ்டம் தான்.

ஒரு ஆற்றங்கரை. அதன் ஓரமாக ஒரு அரசமரம். அதன் அடியிலே ஒரு பெரிய கருங்கல்லிலே செய்யப்பட்ட கனமான கடவுள் சிலை.

ஆத்திகர் ஒருத்தர் இந்த சிலையை சுத்தி கொண்டு வந்து கன்னத்தில் போட்டுக்கொண்டார். இந்த சமயத்தில் நாத்திகர் ஒருவர் அந்த வழியாலே கையிலே ஒரு நாய்க்ககுட்டியை பிடித்துக் கொண்டு வந்தார்.

ஆத்திகர் சிலையை சுற்றி வருவதைப் பார்த்து இவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. என்னங்க இது. இந்தக் காலத்திலேயும் இப்படி இருக்கிறீங்க என்று கேட்டார்.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது". அதனாலே சுற்றி வருகிறேன் என்றார் அவர். "எனக்கு நம்பிக்கை இல்லை" .அதனாலே சிரிக்கிறேன் என்றார் இவர்.

இரண்டு பேருக்கும் விவாதம் ஆரம்பமாகி விட்டது. எதற்கும் அதனை நிரூபிக்க வேண்டும் என்றார் அவர். நிரூபிக்க முடியாது தான் அதனை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார் இவர். என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை என்றார் அவர்.

இப்படி பேசிக் கொண்டே போனார்கள். ஒரு முடிவுக்கு வரவில்லை. கடைசியாக ஒரு சோதனை செய்து பார்த்து விடுவோம் என்று முடிவுக்கு வந்தார்கள்.

அந்த நாத்திகர்தான் இந்த முடிவை சொன்னார். நீங்கள் இந்த உயிரில்லாத சிலையை நம்புகிறீர்கள்! நான் இந்த உயிருள்ள நாய்க்குட்டியை நம்புகிறேன்! நீங்கள் நம்பிக்கை வைத்துள்ள இந்த சிலையை ஆற்றிலே தூக்கிப் போடுங்கள். அதேமாதிரி நான் நம்பிக்கை வைத்துள்ள இந்த நாயை ஆற்றிலே தூக்கி போடுகிறேன் என்று சொன்னார்.

இந்த இரண்டிலும் எது நம்மிடம் நீந்தி கரையேறி வந்து சேர்கிறது என்று பார்த்து விடுவோமா?

இது நாத்திகரோட சவால். இந்த சவாலை ஆத்திகர் ஏற்றுக்கொண்டார். ஆனால் வேறு மாதிரியாக.

நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் இப்படிச் செய்வோம் என்றார். அவர் எப்படி என்று கேட்டார். நான் நம்பிக்கை வைத்திருக்கின்ற இந்த சிலையை இப்படி போட்டு அது மேலே உங்கள் நாயை போடுவோம் என்ன ஆகிறது என்று பார்க்கலாம்.

இப்படி அவர் சொன்னது தான் தாமதம். நாய்க்குட்டியைப் பிடித்துக் கொண்டு வந்த வழியாலே திரும்பி விட்டார்.

இவர்கள் இரண்டு பேரும் இப்படி பிரிந்து போய் விட்டார்களே தவிர.. இந்த விவாதம் என்றைக்கும் இருக்கும்.

அது இருந்து விட்டு போகட்டும். ஆனால் ஒன்று அகங்காரம் இருக்கும் வரைக்கும் மனிதனுக்கு கஷ்டம் இருந்து கொண்டே இருக்கும். அதைப் புரிந்து கொண்டால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்யக்கோரி பெற்றோர்கள் போராட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இலக்கம்-02 பாடசாலையில் நிலவி வருகின்ற பாடரீதியான ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியின்மை, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி மாண வர்களின் பெற்றோர்கள் நேற்று பாடசாலை நுழைவாயிலை மூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள மேற்படி பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புகளில் 246 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலை, மாணவர்களுக்கான குடிநீர் வசதியின்மை மற்றும் மலசல கூட வசதியின்மை என்பவற்றி னால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படும் அதே நேரம் மாண வர்களுக்கு வகுப்பறையிலி ருந்து கற்கக்கூடிய வகையிலே தளபாட வசதிகளும் இல்லாத நிலை காணப்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

சம்பவ இடத்துக்கு அக்க ராயன் பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி சென்று மக்களுடன் கலந்துரையாடிய போதும் அதற்கான தீர்வு எட்டப்படாத நிலையில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தினுடைய உதவிக் கல்விப்பணிப்பாளர் மற்றும் கோட்டக் கல்விப் பணிப் பாளர் ஆகியோர் சம்பவ இடத் துக்கு சென்று போரா ட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வாக்குறுதி வழுங்கியதை அடுத்து போரா ட்டம் கைவிடப்பட்டு மாணவர் களின் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்திச் சென்ற நால்வர் கைது


(நெளுக்குளம்)

அனுமதிப்பத்திரமின்றி ஒட்டு சுட்டான் நோக்கி மாடுகளை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு நால்வர் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

சுதந்திரபுரம் பகுதியிலிருந்து பரந்தன் வீதி ஊடாக ஒட்டுசுட் டான் நோக்கி அனுமதிப்பத்திர ங்கள் ஏதுமின்றி 33 மாடுகளை வீதியூடாக நடத்தி கொண்டு சென்ற போது புதுக்குடியிருப்பு பொலிஸார் கைவேலி பகுதியில் இடைமறித்து சோதனை நட வடிக்கைகளை முன்னெடுத்த வேளை குறித்த கைதுச்சம் பவம் இடம்பெற்றதோடு மாடு களையும் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசா ரணை மேற்கொண்டுள்ள பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாகவும் தெரிவித் துள்ளனர். (நி-5-6-299)

# மீனவர்கள் பிரச்சினைகளை ஆராய புலிபாய்ந்தகல் பகுதிக்கு டக்ளஸ் விஜயம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட த்திற்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்ட கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புலிபாய்ந்தகல் பகுதியில் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்துள்ளார்.

புலிபாய்ந்தகல் பகுதி மீன வர்கள் கடற்றொழிலுக்கு செல் வதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக மீனவர்கள் கடற்றொழில் அமைச்சரிடம் முறையிட்டதனையடுத்து குறி த்த பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா விஜயம் ஒன்றினை மேற் கொண்டு மீனவர்களிடம் சட்ட விரோத மீன்பிடி, காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடினார்.

குறித்த விஜயத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், கொக்குத்தொடு வாய் வடக்கு கிராம சேவை யாளர் எம்.பிரபு, திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் உத்தி யோகத்தர்கள் மற்றும் மீன வர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6-299)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3052

### பாலா

ஒரு கணவரின் அற்புதமான வரிகள்...



ஒரு கட்டத்தில் என் பிள்ளைகள் கூட என் தயவின்றி நடக்கக் கற்றுக் கொண்டார்கள். ஆனால் என் மனைவி இன்னமும் என் கை பிடித்தே நடக்க ஆசைப்படுகிறாள்.

### துஷ்யந்தன்

உங்களுக்கு மதிப்பு கொடுத்து நேரில் பேசிக் கொண்டிருப்பவர்களை காக்க வைத்துவிட்டு...



தொலைபேசியில் வரும் அழைப்புக்கு முதல் மரியாதை கொடுத்துப் பேசுவது மதிப்பு கொடுத்தவருக்கு நீங்கள் தரும் நவீன அவமதிப்பு.

### ஜெய்




அடுத்த ஜென்மமே வேணாம் சாமி. நீ இதுவரைக்கும் பண்ணினதே போதும்.

### சீதா

பசிக்குதுன்னு சாப்பிடுறவன் மனுஷன்.



பசிக்கவே கூடாதுன்னு சாப்பிடுறவன் பெரிய மனுஷன்.

### மதுமிதா

ஆசிரியர்- உனக்கு எந்த மிருகம் பிடிக்கும்?
மாணவன்- பூனை பிடிக்கும்.
ஆசிரியர்- ஏன்?



மாணவன்- பூனை குறுக்க வந்தால் என் பாட்டி ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டாங்க.

### தாரணி

நல்லதே நினை. உனக்கு நல்லதே நடக்கும். அப்படி நடக்கலைன்னா?




நடக்கிறதெல்லாம் நன்மைக்கே என்று நினைச்சுக்கோ.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 419





அவர்களுள் நடுநாயகமாக கம்பீரமான வெள்ளைப் புரவிகளின் மீது சேனாதிபதி பெரிய வேளாரும் பார்த்திபேந்திரனும் வீற்றிருந்தார்கள். குதிரை வீரர்களைத் தொடர்ந்து அம்பாரியுடன் ஒரு பெரிய யானை வந்தது.

இன்னும் சிறிது தூரத்துக்குப் பின்னால் வந்த காலாட் படை புழுதிப் படலத்தின் மங்கலடைந்து காணப்பட்டது. முன்னால் வந்த குதிரை வீரர்கள் வழியில் ஏற்பட்ட தடையினால் அதிருப்தி அடைந்தவர்களாகத் தோன்றினார்கள்.

"யார் அது?", "விலகு!", "வழி விடு!" என்று சில குரல்களும் கேட்டன.

பின்னர் அக்கூட்டத்தின் 'கசமுச கசமுச' என்ற இரகசியப் பேச்சு வார்த்தைகளும் "ஓஹோ!" "ஆஹா!" என்ற வியப்பொலிகளும் எழுந்தன.

வீரர்கள் குதிரைகள் மீதிருந்து குதித்தார்கள். கத்திச் சண்டை போட்டவர்களைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனுங்கூடக் குதிரை மீதிருந்து பூமியில் இறங்கிவிட்டார்கள். வீரர்களின் முன்னணியில் வந்து நின்றார்கள்.

பார்த்திபேந்திரன் படபடத்தான். விக்கிரம் கேசரியிடம், "பார்த்தீர்களா? வல்லத்தானைப் பற்றி நான் சொன்னது உண்மையா? இல்லையா? சுத்த அதிகப் பிரசங்கி! இளவரசரிடமே தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டான். இதை நாம் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதா?" என்று தன் கையிலிருந்த கத்தியை ஓங்கினான்.

பூதி விக்கிரம கேசரி அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்தார். "கொஞ்சம் பொறுங்கள், பார்க்கலாம்! என்ன அற்புதமான கத்திப்போர்! இந்த மாதிரி பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று" என்றார்.

சற்றுப் பின்னால் வந்த காலாள் வீரர்கள் சுமார் முந்நூறு பேர் அவர்களும் வந்து சேர்ந்தார்கள். வட்ட வடிவமாக நின்று வேடிக்கை பார்க்கலானார்கள்.

இதற்குள் யானை மேல் அம்பாரியிலிருந்து ஒரு பெண் கீழே இறங்கினாள். குதிரைகளுக்கும் வீரர்களுக்கும் இடையிடையே அவள் புகுந்து வந்து வேடிக்கை பார்த்த வட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டாள். அவளுடைய முகத்தில் அச்சமயம் குடிகொண்டிருந்த கிளர்ச்சியை இப்படியென்று சொல்ல முடியாது. கத்திகள் அங்கு மிங்கும் பாய்ந்த போது அவளுடைய கண் விழிகளும் பாய்ந்தன. போரிட்டவர்கள் அப்படியும் இப்படியும் குதித்த போது அவளை அறியாமல் அவளுடைய இடை துவண்டு அப்படியும் இப்படியும் ஆடியது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் தன் கூந்தலில் செருகியிருந்த காம்புடன் கூடிய நீலோத்பல மலரை எடுத்துக்கொண்டாள். அதை இப்படியும் அப்படியும் சுற்றிச் சுழற்றத் தொடங்கினாள். கத்திகள் சுழன்ற தாளத்துக்கு இசைய அவளுடைய கையிலிருந்த பூவின் தண்டு சுழன்றது. இந்தப் பெண் யார் என்று வாசகர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆம் பூங்குழலியை அவர்கள் மறந்திருக்க முடியாதல்லவா? சிறிது நேரம் வரையில் அவளுடைய முகத்துக்கும் எதிரே இளவரசர் முகம் தெரியும்படியாக அவ் வீரர்கள் நின்று போரிட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து பாதி விட்டம் சுற்றி வந்தனர். கடைசியில் வந்தியத்தேவனுடைய முகம் பூங்குழலியின் முகத்துக்கு எதிராக வந்தது. இடையிடையே வந்தியத்தேவனுடைய கண்கள் சுற்றிலும் பெருகி வந்த வீரர் கூட்டத்தைக் கவனித்து வந்தன. அப்போது பூங்குழலியையும் பார்த்து விட்டன. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்த வியப்பினால் ஒரு கணம் அவன் கவனம் சிதறியது. அந்த ஒரு கணநேரமே இளவரசருக்குப் போதுமாயிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புலிக்கு வரிகள் வந்தது எப்படி?

முன்னொரு காலத்தில் ஒரு புலி வாழ்ந்து வந்தது. அதுக்கு அதோட உடம்பில கறுப்பு வரிகள் இல்லாமல் இருந்தது. அந்தக் காலத்தில் சிங்கம் மாதிரி பலம் இருந்தும் புலி நரி மாதிரி சுபாவத்தோட நடந்து கொண்டு இருந்தது.



ஒரு நாள் அந்த காட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற விவசாய நிலத்தில் ஒரு விவசாயி தன்னோட காளை மாட்டை பயன்படுத்தி உழுதுகொண்டு இருந்தார்.

அதை பார்த்த புலிக்கு ஒரு சந்தேகம் வந்தது. இது என்ன பலம் வாய்ந்த காட்டு மிருகமான காளை மாடு இப்படி ஒரு சாதாரண மனிதனுக்கு ஏன் வேலை செய்கிறது என யோசித்தது.

அந்த விவசாயி அந்த பக்கம் போனதும் நேராக காளை மாட்டுக்கு கிட்டேயே வந்து தன்னோட சந்தேகத்தை கேட்டது.

அதுக்கு அந்த காளை மாடு சொன்னது. ஒவ்வொரு விலங்குகளிற்கும் பிறவி குணங்கள் இருக்கின்றன. அதை சிலர் புரிந்து கொள்ள ஆரம்பித்ததும் அதை பின்பற்ற ஆரம்பித்து விடுவாங்க. காட்டு மிருகமாகப் பிறந்த எனக்கு புல் கொடுத்து, இருக்க இடம் கொடுத்த விவசாயி என்னோட பிறவி குணத்தை மாத்திட்டார். அதனாலே நான் இப்படி வேலை செய்கிறேன் என சொல்லியது.

புலிக்கு ஒன்றுமே புரியல. அப்ப அந்த காளை மாடு சொன்னது. உனக்கு எவ்வளவோ பலம் இருந்தும் உனக்கு உணவுக்காக படைக்கப்பட்ட என்னை கொன்று சாப்பிடாமல் இப்படி நரி மாதிரி பேசிக்கிட்டு இருக்க. இதுல இருந்தே தெரியுது உன்னோட பிறவி குணத்தை நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்று.

உன்னோட பிறவி குணம் உனக்கு தெரிந்தது என்றால் சிங்க ராஜாவுக்கு அடுத்து நீதான் இருப்ப. உன்னோட பிறவி குணத்தை கண்டுபிடித்து அதுக்கு ஏற்ற மாதிரி வாழ் என்று சொன்னது அந்த காளை மாடு.

இதை கேட்ட புலிக்கு ரொம்ப குழப்பமா போனது. அது எப்படி என்னோட பிறவி குணத்தை கண்டுபிடிக்கிறது என்று யோசித்தது. அதுக்கு ஒன்றுமே புரியல. அதனால் அந்த விவசாயி கிட்டேயே கேட்டு தெரிந்து கொள்ளலாம் என அந்த விவசாயியை தேடிப் போனது புலி.

அந்த விவசாயி ஆடு மேய்த்துக் கொண்டு இருந்தார். அப்ப அங்க வந்த புலி நீங்க தான் அந்த காளை மாட்டோட பிறவிக் குணத்தை தெரிந்து கொண்டு அதை விவசாயத்துக்கு பயன்படுத்துறீங்க.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது,
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது!
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனங்களை உருக்கிய சாந்தனின் மரணம்

சாந்தன் இந்தப் பெயரை அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்திய தேசத்திலும் இலங்கையிலும் ஏன் உலகிலுள்ள தமிழ் மக்கள் மத்தியிலும் இந்தப் பெயர் பரீட்சயமானது.

ஆம், இந்தியாவின் பிரதமராக இருந்த ராஜிவ் காந்தியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டில் இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சாந்தனுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு அளித்திருந்தது.

சாந்தனுடன் முருகன், பேரறிவாளன், நளினி உள்ளிட்டோருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள், தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை மறுபரிசீலனைக்கு உட்படுத்துமாறு கோரி மேன்முறையீடு செய்தனர்.

அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம் சாந்தன் உள்ளிட்டவர்களுக்கு விடுதலை வழங்கியிருந்தது.

33 ஆண்டுகள் சிறையில் இருந்த சாந்தன் விடுதலை பெற்றபோது, தன் தாயகமான ஈழத்துக்கு வர விரும்பினாராயினும் அது இறுதிவரை சாத்தியமாகாமல் போனமை மனிதநேயமுள்ளவர்களின் மனங்களை நிச்சயம் உருக்கவே செய்யும்.

ஆம், 33 ஆண்டுகள் சிறையில் இருந்து விடுதலை பெற்ற தன் மகனை ஒருமுறையேனும் பார்த்துவிட வேண்டுமென சாந்தனின் வயோதிபத் தாயார் கடும் பிரயத்தனம் செய்திருந்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கை வருவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் அதற்குரிய ஆவணங்களைச் செய்து கொடுப்பதிலும் காட்டப்பட்ட அசமந்தம் காரணமாக சாந்தனால் தன் சொந்த இடத்துக்கு வர முடியாத நிலைமை ஏற்பட்டது.

என்ன செய்வது மனிதாபிமானம் – மனித நேயம் என்றெல்லாம் உரக்கப் பேசினாலும் மனித வக்கிரங்கள் எக்காலத்திலும் தீர்க்க முடியாத அவலங்களையும் பரிதாபங்களையும் ஏற்படுத்தி விடுகின்றன.

அதில் ஒன்றுதான் கடைசிவரை சாந்தன் தன் தாய் மண்ணுக்கு உயிரோடு வரமுடியாமல் போன பரிதாபம்.

உண்மை. இன்னும் ஒரு சில நாட்களில் சாந்தன் தன் சொந்த நாடான ஈழத்துக்கு செல்லலாம் என்ற செய்திகளும் அதற்குரிய அத்தனை ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டதான அறிவிப்புகளும் வெளியாகியிருந்தன.

இலங்கையிலும் சாந்தன் தன் ஊருக்கு வரமுடியும் என்பதான அனுமதி கிடைக்கப் பெறுகிறது.

இன்னும் ஓரிரு நாட்களில் தான் பிறந்த மண்ணில் கால்பதிக்கப் போகிறேன் என்ற ஆர்வம் சாந்தனிடம் குடிகொள்கிறது.

கூடவே பெற்ற மகனைச் சந்திக்கப் போகிறேன் என்ற தாயின் ஆனந்தம்.

அத்தனையும் ஒரு கணப்பொழுதில் இருளாகிப் போவதாக சாந்தன் மரணித்துவிட்டார் என்ற செய்தி காற்றோடு கலக்கிறது.

அந்தோ! எத்துணை கொடுமை. உயிரோடு பார்க்க வேண்டிய தன் மகனை உயிரற்ற உடலாய்ப் பார்க்கின்ற பரிதாபத்தை ஆட்சி அதிகாரங்கள் ஏற்படுத்திவிட்டன.

ஓ! சாந்தனின் மரணம் மனிதநேயமற்ற மனிதர்களால் விளையப்பெற்றது.

அந்த மரணம் மனிதநேயமுள்ளவர்களின் மனங்களை வதைத்துவிட்டது.

இனி ஒருபோதும் அவன் தன் தாயை, தான் பிறந்த மண்ணை பார்க்கவே முடியாது.

# மீனவர்கள் பிரச்சினைக்கு இணக்கப்பாட்டுடன் பேச்சுவார்த்தை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(முல்லைத்தீவு)

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இணக்கப்பாட்டுடன் பேசுவதற்கு தயார் என தமிழ்நாட்டு மீன்வளத்துறை அமைச்சருக்கு தெரிவித்ததாக இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன்போது இலங்கை இந்தியா மீனவர்கள் பிரச்சினை தொடர்பிலான இரு நாட்டு அரசின் பேச்சுக்கள் தொடர்பில் முன்னேற்றம் ஏதும் இருக்கிறதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்.

நேற்று (நேற்று முன்தினம்) என்னுடன் தமிழ் நாட்டு மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் தொலைபேசியில் பேசி இருந்தார் இந்தபிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றார்.

தமிழக முதலமைச்சருடன் கலந்துரையாடுவதாகவும் அவர் ஊடாக பாண்டிச்சேரி முதலமைச்சருடன் கலந்துரையாடுவதாகவும். எனக்குத் தெரிவித்தார்.

அதேநேரத்தில் என்னையும் அந்த கலந்துரையாடலுக்கு நேரில் அல்லது தொலைபேசியில் கலந்து கொள்ள முடியுமா என்று கேட்கப்பட்டதற்கு நான் அதற்கு இணங்கியுள்ளேன்.

எனக்கு அவர்கள் உத்தரவாதம் தரவேண்டும் அவர்களின் இழுவைமடி படகுகள் எங்கள் கடலுக்குள் வந்து வளங்களை சுரண்டுகின்ற, அழிக்கின்ற, எங்கள் கடற்தொழில் மக்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கின்ற செய்ற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்ற உத்தரவாதத்தினை தருவார்களாக இருந்தால் நான் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு தயாராக இருக்கின்றேன் இது தான் பேச்சுக்கான அடிப்படை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-7,299)

## இந்திய மின்சக்தி அமைச்சின் உயர்மட்ட குழு இலங்கை வருகை

(கொழும்பு)

இந்திய மின் சக்தி அமைச்சின் செயலாளர் பங்கஜ் அகர்வால் தலைமையிலான குழுவினர் மூன்று நாள் விஜயமாக நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை அவரது அமைச்சில் நேற்று சந்தித்தனர்.

இதன்போது, இந்தியாவுடன் திட்டமிடப்பட்டுள்ள மின் கட்டமைப்பை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம், 130 மெகாவாட் சம்பூர் மின்னுற்பத்தி செயற்றிட்டம், யாழ். மாவட்டத்தின் மூன்று தீவுகளில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச மின்மயமாக்கல் செயற்றிட்டங்கள் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதனிடையே, இந்திய முதலீட்டில் முன்னெடுக்கப்படும் ஏனைய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி செயற்றிட்டங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம், அவை செயற்படுத்தப்படவுள்ள கால அட்டவணை ஆகியன தொடர்பிலும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்திய மின்சக்தி அமைச்சு, இந்திய மத்திய மின்சார அதிகார சபை, இந்திய தேசிய நிலக்கரி வலுசக்தி நிறுவனம், பவர் க்ரிட் நிறுவனம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப் படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ள குழுவில் உள்ளடங்கியுள்ளனர். (ம-7)

## நூற்றாண்டு நிறைவுக் கட்டுரை உள்ளடக்கப்படவேண்டிய பதிவு

**கலாசாலை ஓய்வு நிலை அதிபர் சோ.ப. கருத்து**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி முனைவர் ச.மனோண்மணி அவர்களால் வலம்புரி நாளிதழில் எழுதப்பட்ட வரலாற்றுக் கட்டுரையில்;

பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலிருந்து 2004இல் வெளியேறியது என்ற விடயம் சேர்க்கப்பட வேண்டும் என்பதையும் 2015ஆம் ஆண்டில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டது என்ற தகவலையும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபர் சோ.பத்மநாதன் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனைக் குறித்த கட்டுரையில் உள்வாங்கிக் கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்வதுடன் பிரஸ்தாப கட்டுரை மீள் பதிப்புக்குட்பட்டதால், கால அசைவில் ஏற்பட்ட மாற்றங்கள் அக் கட்டுரைக்குள் உள்வாங்கப்படவில்லை என்பதையும் வாசகர்கள் கருத்திற் கொள்ளவும்.

- ஆசிரியர்

## பட்டாசு தொழிற்சாலையில் தீ விபத்து; இருவர் மரணம்

(கொழும்பு)

கட்டான - கிம்புலாபிட்டியவில் அமைந்துள்ள பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

16 மற்றும் 21 வயதுகளையுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளரின் மகனும் இவர்களில் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் கிம்புலாபிட்டிய - வெரல்வத்த பகுதியை சேர்ந்தவராவார்.

அதிக உஷ்ணம் காரணமாக தீ பரவியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (ம-7)

## துப்பாக்கி பிரயோகம் சந்தேக நபர் மரணம்

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் (STF) இடம்பெற்ற பரஸ்பரத் துப்பாக்கிப் பிரயோகத்தில் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் நபரொருவர் சூரியவெவ பகுதியில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் வீடொன்றில் மறைந்துள்ளதாக நேற்று முன்தினம் தகவல் கிடைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், சந்தேகநபரைக்கைது செய்வதற்காக அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டிய - வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மஹபாகே பகுதியில் கடந்த 21 ஆம் திகதி ஒருவரை சுட்டுக்கொலை செய்தமை மற்றும் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வெல்லம்பிட்டிய பகுதியில் ஒருவரை சுட்டுக் கொலை செய்தமை ஆகிய சம்பவங்களில் அவர் சந்தேகநபராகக் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

(ம...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வணங்கா மண்' வெற்றிக்கிண்ண கிளித்தட்டு போட்டியில் சம்பியனானது இந்துபுரம் 'B' அணி



வணங்கா மண் மறுவாழ்வுக் கழகம் நடத்திய "வணங்கா மண் வெற்றிக்கிண்ணம் -2024" கிளித்தட்டு சுற்றுப் போட்டியில் இந்துபுரம் "B" அணி சம்பியனானது.

மருவிவரும் தமிழர்களுடைய பாரம்பரியம் மற்றும் வாழ்வியலை மீட்டெடுக்கும் முகமாக வணங்காமண் மறுவாழ்வுக் கழகம் ஏற்பாடு செய்த மாபெரும் பண்பாட்டு பெருவிழாவில் ஒரு அங்கமாக இந்த கிளித்தட்டு போட்டி நிகழ்வினையும் ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை(25) அன்று நெடுங்கேணி 17ஆம் கட்டை துர்கா விளையாட்டுக்கழக மைதானத்தில் இறுதிப்போட்டி இடம்பெற்றது. இந்துபுரம் A மற்றும் இந்துபுரம் B அணிகள் போட்டியிட்டன. இதில் இந்துபுரம் B அணி முதலாம் இடத்தையும் இந்துபுரம் A அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற அணி வீரர்கள் அனைவருக்கும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதோடு அணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் 2 ஆம் இடத்தைப் பெற்ற அணி வீரர்கள் அனைவருக்கும் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதோடு அணிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் பணப் பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6-299)

# சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றுள்ள சென்.லூட்ஸ், நவஜீவன்ஸ் அணிகள்





வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் சென். லூட்ஸ் மற்றும் நவஜீவன்ஸ் அணிகள் சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முதலில் நடைபெற்ற ஆட்டத்தில்சென்.லூட்ஸ்அணியை எதிர்த்து யாழ் ஐக்கியம் அணி மோதியது.

இதில் சென்லூட்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சூப்பர் லீக்கிற்கு தகுதியானது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து காரைநகர் தோப்புக்காடு அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் .அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சூப்பர் லீக்கிற்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)


காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
ஸ்தாபக தின நிகழ்வு
( ஸ்தாபகம் - 01.03.2002 )
இடம்:- கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்
காலம்:- 01.03.2024 வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணி
கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் யாழ். கிளை 428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
நிகழ்ச்சி நிரல்
• கௌரவம் பெறுபவர் அழைத்து வருதல்
• ஸ்தாபக தின உரை
• "சிதம்பரஜோதி" உயர்விருது வழங்கிக் கௌரவித்தல்
நிகழ்ச்சிகள்
இசைக்கச்சேரி - இசை நாவரசு M.S.பிரதீபன்
நாட்டியாஞ்சலி - கலாமன்ற நடனத்துறையினர்
நெறியாள்கை "நாட்டிய வித்தகன்" "முதுகலைமாணி"
ஆனந்தகிருஸ்ணன் ஸ்ரீகாந்த் (கலாமன்ற நடன ஆசிரியர்)
வில்லிசை
அளவையூர் "கலைவாணி "வில்லிசைக் குழுவினர் வழங்கும்
"பட்டினத்தார் வரலாறு"
காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் வழங்கும் "சிதம்பரஜோதி" உயர்விருது பெறுவோர் -2024

திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்கள்
(தலைவர், வாழ்வகம், சுன்னாகம்)
(ஓய்வு நிலை விரிவுரையாளர், தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய்)
குறிப்பு - நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.
( இல 428, கே.கே.எஸ் வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை.)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(C-8433)


## நாடு திரும்பக்...

தமிழகத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்காக 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி வருகை தந்த ராஜீவ் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப் பட்டனர்.

அதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகள் நடைபெற்ற நிலையில் சாந்தன் என்ற சுதேந்திர ராஜாவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில் 1999ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக் கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவரையும் இதே வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்த நளினி, முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரையும் இந்திய உச்ச நீதிமன்றம் விடுவித்தது.

இதில் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் இந்தியக் குடிமக்கள் என்பதால் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். முருகன், ஜெயக்குமார், சாந்தன், ராபர்ட் பயஸ் ஆகியோர் இலங்கை குடிமக்கள் என்பதால் அவர்கள் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர்.

தங்களுக்கு தற்காலிக பயண ஆவணங்களை வழங்கி, தங்களை விரும்பும் நாடுகளுக்கு அனுப்ப வேண்டுமென நால்வரும் கோரிவந்தனர்.

33 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாந்தனுக்கு பல உடல்நல பிரச்சினைகள் இருந்தன.

குறிப்பாக கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதையடுத்து சிகிச்சைக்காக அவர் திருச்சியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டிருந்தார்.

ஆனால், அவரது உடல் நிலை தொடர்ந்து மோசமடையவே, அவர் சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் கடந்த ஜனவரி 27ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில், நேற்று காலையில் அவருக்கு இதயத் துடிப்பு முடக்கம் ஏற்பட்டு, உயிரிழந்தார்.

சாந்தன் தனக்கு தற்காலிக பயண ஆவணங்களைக் கோரிவந்த நிலையில், கடந்த வெள்ளிக் கிழக் கிழமை, அதாவது பெப்ரவரி 23ஆம் திகதியன்று வெளிநாட்டவருக்கான பிராந்திய பதிவு அலுவலகத்தில் இருந்து பயண ஆவணங்கள் வழங்கப் பட்டன.

இதையடுத்து அவரை இலங்கைக்கு அனுப்புவதற்கான பணிகள் தீவிரமடைந்தன.

உடல்நலம் சரியானதும் அவர் இலங்கைக்கே திரும்பிச் செல்வார் என எதிர்பார்க் கப்பட்டது. ஆனால், அவருடைய உடல்நலம் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து நேற்று உயிரிழந்தார்.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்பட்ட சிவராசனின் உதவியாளராகச் செயற்பட்டவர் என்ற குற்றச்சாட்டில் சாந்தன் என்ற சுதேந்திரராஜா சி.பி.ஐயால் கைது செய்யப்பட்டார். கடந்த 1990 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கையிலிருந்து இந்தியா வந்த சாந்தன், கோடம்பாக்கத்தில் இருந்த மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் இஞ்சினீயரிங் டெக்னாலஜியில் படித்தார்.

இந்த காலகட்டத்தில் சிவராசனுக்காக ஈ.பி.ஆர். எல்.எப். போராளிக் குழுவினரை உளவு பார்த்ததாக இந்தியப் புலனாய்வு அமைப்புகள் கூறின. பத்மநாபாவின் படுகொலைக்குப் பிறகு, இலங்கைக்குத் திரும்பிச் சென்ற சாந்தன், மீண்டும் இந்தியாவிற்கு திரும்பிவந்து ராஜீவ் காந்தியின் கொலையில் ஈடுபட்டதாகவும் குற்றம்சாட்டப் பட்டது.

ஆனால், அடையாள மாறுபாட்டின் காரணமாகவே கைது செய்யப்பட்டதாக சாந்தன் தொடர்ந்து கூறிவந்தார்.

சாந்தன் விடுதலையான பிறகு, அவரை இலங்கைக்கு அனுப்ப முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அவரது தாயார் மகேஸ்வரி தொடர்ந்து கோரிக்கை விடுத்துவந்த நிலையில் சாந்தன் உயிரிழந் துள்ளார்.

சாந்தனின் குடும்பத்தினர் யாழ்.மாவட்டம் உடுப்பிட்டியில் வசித்து வருகின்றனர். சாந்தனின் உடலை "எம்பாமிங்' செய்து இலங்கைக்கு அனுப்பும் முயற்சியில் ஈடு பட்டு வருவதாக வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வரு...

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் நேற்று சென்னையில் காலமானார்.

இந்நிலையில் சாந்தனின் உடலை எதிர்வரும் இரண்டு தினங்களில் இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாந்தன் தரப்பு சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

சாந்தனின் தாயார் மற்றும் உறவினர்கள் யாழ்ப்பாணம் உடுப்பிட்டிப் பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 'விடுதலைக்கு...

சுதேந்திரராஜா இறுதியாக எழுதிய கவிதை என்று சாந்தனின் கையெழுத்துடன் கவிதை ஒன்றை கொடுந்தமிழன் என்பவர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

*"அரசே*
*வன் செவிதான் நின் செவி*
*விடுதலைக்கு ஏங்கி*
*யாம் பாடும்*
*பாடல் உன்னை எட்டவில்லையா*

என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

## சகோதரனுடன்...

கிழமை சந்தித்தார்.

இதன்போது எடுத்துக் கொள்ளப்பட்ட புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது. (ம-7)

## பேரறிவாளன்...

வழக்கில் விடுதலையான நளினி மற்றும் பேரறிவாளன் ஆகியோரும் தொல் திருமாவளவன், சீமான் உள்ளிட்டவர்களும் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.(ம-7)

## இலங்கையில்...

பெற்ற பேச்சு தொடர்பில் மதுரை ஆதீனத்தின் பீடாதிபதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கச்சதீவு இலங்கை வசமிருப்பதால் இந்திய மீனவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீட்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அங்கு தமிழர் பகுதியை தனி நாடாக மாற்ற வேண்டும். இப்படி இந்தியப் பிரதமரிடம் நேரில் கோரிக்கை விடுத்தேன். இவற்றைக் கேட்ட பிரதமர் அவற்றைச் செய்வதாகக் கூறியுள்ளார்" என்றார். (ம-7)

## வடக்கின்...

கான புதிய இந்திய துணை தூதுவர் வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று சந்தித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது இந்திய துணைத் தூதுவருக்கு தெளிவுபடுத்தினார்.

அதற்கமைய, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என புதிய இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவித்தார்.

இளைஞர், யுவதிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொடுக்கவும், தீவுகளுக்கான படகு சேவையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான வசதிகளை ஒழுங்கு செய்வதுடன், தரை மற்றும் கரையோர தூய்மை திட்டத்திற்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் கூறினார்.

தூய்மை திட்டத்திற்கு தேவையான நிதியை இந்திய துணைத் தூதரகத்திலிருந்து ஒதுக்கவும் நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி உறுதியளித்தார். (ம-7,33)

## மின்சாரம்...

பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது வீட்டில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது.

அயல் வீட்டில் இருந்து மின்சாரம் பெற்று தண்ணீர் மோட்டார் பயன்படுத்தியுள்ளார். இந் நிலையில் இவர் மின்சார தாக்குதலுக்கு உள்ளானார்.

இதன்போது அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## சபாநாயகருக்கு...

கட்சி தீர்மானித்துள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்த குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர்.

அதன்படி குறித்த தினத்தில் லேயே எம்.ஏ. சுமந்திரன், லக்ஷ்மன் கிரியெல்ல, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, சந்திம வீரக்கொடி மற்றும் ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இதனை அடுத்து உத்தர லங்கா கட்சியும் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தன.

இணையப்பாதுகாப்புச்சட்டத்தை சான்றுப்படுத்தும் போது நீதிமன்றம் வழங்கிய ஒன்பது பரிந்துரைகளை சபாநாயகர் புறக்கணித்து விட்டார் என தெரிவித்தே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது. (ம-7)

## ஐ.நா...

பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமானது.

இந்நிலையில் நேற்றுமுன்தினக் கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி உரையாற்றியிருந்தார்.

இலங்கை தற்போது கடுமையான தடைகளை எதிர்நோக்குகின்ற போதிலும் மக்களிற்கு பயனளிக்கக்கூடிய ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் தீர்மானங்களை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் இதன்போது அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த தீர்மானங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையையும் அரசாங்கம் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இவ்வாறான பொறிமுறைகள் ஆக்கபூர்வமற்றவை என்பதுடன், அவை எதிர்மறையானவை என்றும் அலி சப்ரி குறிப்பிட்டிருந்தார்.(ம-7)

மெகா பவர்
திகதி 2024.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 1752
0 | 08 | 26 54 64 68
57634 | ரூ.1,000,000/- | 192818

லக்கி 7 VIP
திகதி 2024.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 0230
E 9 7 1 3 2 6 E

தன நிதானய
திகதி 2024.02.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1434
B 20 37 44 60 B
Double Chance 71612

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3646
சீட்டிழுப்பு திகதி 28.02.2024
L 17 43 47 51
L 69279

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.28
சீட்டிழுப்பு இலக்கம் 0713
துலாம் 08 13 48 55 துலாம்
56368 | 04

மஹஜன சம்பத
திகதி 2024/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 5404
Z 8 9 7 2 9 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2378 | வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.02.28 | தினம் புதன்கிழமை
21 40 57 66 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,242,786.40

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.02.2024 | வெற்றி வாரம் 112 | பசுமை
Y 0 1 8 3 2 8 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,040,012.00
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சனிதா
திகதி 2024.02.28 வெற்றி வாரம் 4539
05 20 32 55 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,287,610.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4090 | வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.28 | தினம் புதன்கிழமை
11 26 31 42 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,297,224.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 26 59 61 65 75
1554 | 28.02.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 508,785,182.20

ஜயோதா Jayoda
திகதி 2024.02.28 வெற்றி வாரம் 2004 வர்ணம் மஞ்சள்
40 46 59 60 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,227,820.00

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2204
வர்ணம்: ரோஸ்
சீட்டிழுப்பு திகதி: 2024.02.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,813,563.20
02 11 44 74 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (19236)

076 825 7716 (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில்
வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு (19306)

077 986 5457



## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரில், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் சகல வசதியுமுடைய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. (19307)

077 215 5711



## V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOININMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-8435)



## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777

(C-8435)


## காணவில்லை

ஏழாலை வடக்கு, ஏழாலையைச் சேர்ந்த செல்வி. எசேக்கியல் இராசையா பேர்ள் யோகமணி வயது 75 என்பவரை நுணாவில் மேற்கு, சாவகச்சேரி எனும் இடத்திலிருந்து 28.02.2024 புதன்கிழமை அன்று மாலை 4.30 மணியளவிலிருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் 077 844 8747, 075 984 4874 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.



(C-8436)

தகவல் குடும்பத்தினர்.

ஓம்
ஐயனார் துணை



அனலைதீவு நயினாகுளம் கூழாவடியுறை

### திருவருள்மிகு பூரணைதேவி புஷ்கலாதேவி உடனுறை ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில்

### விசேட பொதுக்கூட்ட அறிவித்தல் - 2024

மெய்யன்புடையீர்!

அனலைதீவு திருவருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில் திருப்பணி வேலைகள் தொடர்பாகவும், மேலதிகமாக செயற்படுத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடி திருப்பணிச்சபை ஒன்றை தெரிவு செய்யும் நோக்குடன் எதிர்வரும் 01.03.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலய முன்றலில் விசேட பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே ஐயனாரின் மெய்யடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து ஐயனாரின் திருப்பணி வேலைகளை சிறந்த திட்டமிடலுடன் மேற்கொள்ள ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அனைத்து ஐயனாரின் அடியார்களையும் அழைக்கின்றோம்.**

5ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

(19305)

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை.

## இதய அஞ்சலிகள்



யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி **கௌரவ மதியாபரணன் ஆபிரகாம் சுமந்திரன்** அவர்களின் பாசமிகு அன்னை

### திருமதி
### கிளேடிஸ் புஸ்பராணி மதியாபரணன்

அவர்களின் பிரிவுச்செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்ப உறுப்பினர்களின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னையின் ஆத்மா நித்திய இளைப்பாறுதலடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி தொகுதிக்கிளை
இலங்கை தமிழரசுக் கட்சி

( C-8431 )

## ஈழ. நல்லூர் சாரங்கம் இசை மன்றம்

நடாத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்

### 177 ஆவது இசை ஆராதனை விழாவும்

மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும்

**2024**



இடம் : நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்
காலம் : 29.02.2024 வியாழக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.00 மணி

தலைவர்
செஞ்சொற் செல்வர்
**கலாநிதி. ஆறு திருமுருகன்** அவர்கள்

**விழா நிகழ்வுகள்**

- இறைவணக்கம்
- ஈழத்தில் புகழ் பூத்த இளங் கலைஞர்களின் மங்கள இசையுடன் தீப ஆராதனையும்
- தொடக்க உரை : திருமதி குககுமாரி, விஜயரகுநாதன் ( ஓய்வுபெற்ற அதிபர் - நல்லூர் விக்னேஸ்வராக் கல்லூரி )
- மூத்த இசைக் கலைஞர்கள், இளம் கலைஞர்கள், வாத்திய இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் பஞ்சரத்தின இசை ஆராதனை
- சாரங்கம் இசை மன்ற மாணவர்களின் கீர்த்தனை மாலை
- மூத்த நாதஸ்வர இசை சக்கரவர்த்திகளான கலாநிதி.இ.கேதீஸ்வரன், கலாநிதி.ப.நாகேந்திரன் ஆகிய இருவருக்கும் "சங்கீத சாணக்கிய" விருது வழங்கும் நிகழ்வு



- கௌரவம் பெற்ற கலைஞர்களின் ஏற்புரை
- மன்ற கீதம்
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(19302)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org